★★★★★★★★★
★ இன்றைய சிறு ★
★ விளம்பரங்கள் ★
★★★★★★★★★

## அறிவித்தல்

நாம் புதிய கிளை ஸ்தாபனம் ஒன்றை ஆஸ்பத்திரி வீதியிலுள்ள (Bank of Ceylon) அருகாமையில் ஆரம்பித்துள்ளோம் என்பதை எமது வாடிக்கையாளர்களுக்கு மகிழ்ச்சியுடன் அறியத்தருகின்றோம். கண் வைத்திய நிபுணர்களினால் பரிசோதனை செய்த கண்ணாடிகளை சரிவரப் பெற்றுக்கொள்ளக்கூடிய ஒரே ஸ்தாபனம். S M. Fernando 580, 1ஆம் மாடி, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். (1111)

சேரப்பாய் லயன்ஸ் கழகத்தின் அதிஷ்டலாபச் சீட்டிழுப்பு தவிர்க்க முடியாத காரணங்களால் 19-4-87 இல் நடைபெறாது. சீட்டிழுப்பு 31-5-87 இல் நடைபெறும். (8831)

## தவறிவிட்டது

16-4-87 இல் யாழ்ப்பாணத்தில் எனது 4901 46815V அடையாள அட்டையும் மோட்டார் அனுமதிப் பத்திரமும் தவறிவிட்டது கண்டெடுத்தவர்கள் தயவு செய்து மா. தயாளநிதி 70/2, செம்மணி வீதி, நல்லூர், யாழ்ப்பாணம் என்ற விலாசத்தில் ஒப்படைக்கவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும் (1207)

## கண்டெடுக்கப்பட்டது

சுப்பையா தேவசகாயம் வீதி, புளியங்குளம். (658331396X) ஆகிய அடையாள அட்டை முத்திரைச் சந்தியில் கண்டெடுக்கப் பட்டுள்ளது உரியவர் வந்து கீழ்க்கண்ட விலாசத்தில் தொடர்பு கொள்ளவும் S ராம், சங்கிலி முகாம் முத்திரைச்சந்தி, நல்லூர். (1210)


# பாதிக்கப்பட்ட பகுதிகளில்
# விசேஷ சுகாதாரச் சேவை

யாழ்ப்பாணம், ஏப் 19

பாதிக்கப்பட்ட மக்கள் வாழும் பகுதிகளில் விசேஷ சுகாதார சேவைகளை தெல்லிப்பளை சுகாதாரப் பகுதியினர் செயற்படுத்தி வருகின்றனர்

பாதிக்கப்பட்ட மக்கள், அப்பகுதி குடும்ப நல சேவையாளர்கள், சுகாதார பரிசோதகர்கள் பொது ஸ்தாபனங்கள் மூலம் தொடர்பு கொள்ளுமாறு தெல்லிப்பளை சுகாதார வைத்திய அதிகாரி கேட்டுள்ளார்

பாதிக்கப்பட்ட மக்கள், பொதுமக்களுக்கான நோய்த் தடுப்பு நடவடிக்கைகளையும் சிறு நோய்களுக்கான மருத்துவ சிகிச்சைகளையும் தெல்லிப்பளை சுகாதாரப் பகுதியினர் செய்து வருகின்றனர்.

சிகிச்சை நிலையங்கள், குடும்பநல சேவையாளர்கள் சுகாதார பரிசோதகர்கள் மூலமாக இலவசமாக இச் சிகிச்சைகள் வழங்கப்படுகின்றன.

பிரிட்டிஷ் சிறுவர் நிதியத்தின் யாழ் கிளைப் பிரிவு உதவியுடன் பாதிக்கப்பட்ட தாய்மார் பிள்ளைகளுக்கு மருந்து வகைகளையும் போஷாக்கு உப உணவு வகைகளையும் தெல்லிப்பளை சுகாதாரப் பகுதியினர் வழங்கி வருகின்றனர்.

(இ-ன)

## கல்வி திருட முடியாத அரும்பெரும் சொத்து

வேலணை, ஏப்.19

மனிதன் கல்வியைக் கற்பிப்பதற்கு முக்கிய இடம் கொடுக்கப்பட வேண்டும். எந்தப் பொருளையும் களவு எடுக்கலாம் ஆனால் ஒருவர் பெற்ற கல்வி அறிவை களவு எடுக்க முடியாது'

மேற்கண்டவாறு தெரிவித்தார் வேலணை உதவி அரசாங்க அதிபர் திரு. சி. சடாட்சரசண்முகதாஸ்

வேலணை சைவப்பிரகாச வித்தியாசாலையின் புதிய கட்டடத் திறப்பு விழா பாடசாலை அதிபர் திரு செ வரதலிங்கம் தலைமையில் நடைபெற்றது

உதவி அரசாங்க அதிபர் தொடர்ந்து உரையாற்றுகையில் கல்வியும் ஒழுக்கமும் சிறந்து விளங்கும் ஆலயம் தான் பாடசாலை என்றார்.

வேலணை வட்டாரக் கல்வி அதிகாரி தமது உரையில் ஆசிரியர்கள் தன்னலமற்ற சேவையை ஆற்றினால் தான் மாணவர்களின் கல்வியை உயர்த்த முடியும் என்றார்.

திறப்பு விழாவில் யாழ் மாவட்ட கல்விப் பணிப்பாளர் எம் எம். மன்சூர், வேலணை கோட்டக் கல்வி அதிபர் திரு. எம் சிவராஜரெத்தினம். வேலணை முன்னாள் வட்டாரக் கல்வி அதிகாரி திரு கொக்கரணேசன், ஆகியோர் உரையாற்றினர்கள். (இ-167)

## யாழ் ஆஸ்பத்திரியில் சுகாதார சேவை தொண்டர்களுக்குப் பயிற்சி

யாழ்ப்பாணம், ஏப் 19

யாழ் - வைத்தியசாலையின் நோயாளர் நலன் புரிச் சங்கம் தற்போது சுகாதார சேவைக்கென தொண்டர்களுக்கான பயிற்சி நெறி வகுப்பு ஒன்றை ஆரம்பித்து நடைமுறைப்படுத்தி வருகின்றது.

தொண்டர்களுக்கு ஆரம்ப சுகாதாரம், தாதியர் பயிற்சி முறை. சிறு நோய்களுக்கான வைத்தியம் போன்ற பாடங்கள் செய்முறையிலும் பாடமுறையிலும் போதிக்கப்பட்டு வருகின்றன

பேராசிரியர்களும், வைத்தியர்களும், சுகாதார உத்தியோகஸ்தர்களும், தாதிமாரும் இவற்றைப் போதித்து வருகின்றனர்.

இதற்கான இடவசதியினை யாழ் அரசினர் வைத்தியசாலை அளித்து வருகின்றது இம்முறையில் தொண்டர்களுக்கு ஒரு மாதப் பயிற்சியே அளிக்கப்படுகிறது.

தொண்டர்களுக்கான இப்பயிற்சி தொகுதி ரீதியாகவே அளிக்கப்பட்டு வருகிறது சந்நகாதம் மல்லாகம் தொகுதிக்கான பயிற்சி முடிவடைந்ததும் பருத்தித்துறைத் தொகுதிக்கான தொண்டர்களுக்கு பயிற்சி அளிக்கப்பட்டு வருகிறது.

(இ)

### உருவப்படம் திரை நீக்கம்

யாழ்ப்பாணம், ஏப். 18

இலங்கை கம்யூனிஸ்ட் கட்சியின் அரசியல் குழு உறுப்பினராகவும் யாழ் பிரதேச கிளையின் காரியதரிசியாகவும் செயலாற்றிய அமரர் திரு பொன் குமாரசாமியின் உருவப் படம் கட்சியின் யாழ் மாவட்டப் பணிமனையில் நாளை காலை பத்து மணிக்கு திறந்துவைக்கப் படும்

கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர்களில் ஒருவரும் கல்விமானுமாகிய திரு அ வைத்திலிங்கம் உருவப்படத்தை திறந்து வைப்பார்

கட்சியின் மாவட்டச் செயலாளர் திரு. திரு சி விஜயானந்தன் தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்ச்சியில் திரு ஐ ஆர். அரியரத்தினம், திரு. க. அன்னலிங்கம், திரு எஸ் சிவரத்தினம், சி சுப்பிரமணியம் ஆகியோர் உரை நிகழ்த்துவர் (உ-10)

### முதலாவது ஆண்டு நினைவு விழா

மண்டைதீவு, ஏப். 19

பிரபல சமூக சேவையாளரும் இணக்கசபை உறுப்பினரும் சமாதான நீதிபதியுமான அமரர் இ. சந்தைபாலின் முதலாவது ஆண்டு நினைவு தின விழா அண்மையில் மண்டதீவில் நடைபெற்றது.

மண்டைதீவு வள்ளுவன் சனசமூக நிலைய முன்றலில் நிலையத் தலைவர் திரு ம ஞானப் பிரகாசம் தலைமையில் இவ்விழா நடைபெற்றது (இ-ன-88)



## ஈச்சமோட்டை விளையாட்டுக் கழக கிரிக்கெட் போட்டி முடிவுகள்

யாழ்ப்பாணம்,ஏப்ரல் 19

ஈச்சமோட்டை விளையாட்டுக்கழகம் நடத்தும் 'நொக் அவுட்' முறையிலான மென்பந்து கிரிக்கெட் போட்டியிலும் 38 விளையாட்டுக் கழக அணிகள் பங்குபற்றுகின்றன. இந்த போட்டியில் இதுவரை நடந்த முந்த ஆட்டங்களின் முடிவுகள் வருமாறு:-

ஈச்சமோட்டை வி. க. அணியை செல் அந்தனீஸ், வி க. அணியும், நியூஸ்ராரீஸ் வி. க. அணியை கொக்குவளர்மதி வி. க. அணியும், சென் மேரிஸ் வி க. அணியை திறீஸ்ராரஸ் வி க அணியும் தோற்கடித்தன.

வைற் கோக்ஸ்ராரீஸ் வி. க அணியை கொய்யாத்தோட்டம் வி. க. 'பி' வென்றது. இளஞ்சிங்க வி.க.அணி நெட்டமண்ஸ் வி. க. அணியையும், யங் லயன்ஸ் வி. க. அணி கோல்ட் ஸ்ராரீஸ் வி க. அணியையும்நொதேர்ன் வி. க. 'பி' அணி சரஸ்வதி வி க. அணியையும், நொதேர்ன் வி. க. 'ஏ' அணி றிறின் பீக்ட் வி.க. அணியையும் வென்றன.

பாடும்மீன் வி.க.அணி யைப் புளூடயமன்ஸ் வி. க. அணியும் கலைமகள் வி க. அணியை சென். ஜுலீஸ் வி. க. அணியும் அம்பாள் வி. க. அணியை ஜெற்றேனேர்ஸ் வி. க. அணியும் தோற்கடித்தன.

இந்த போட்டிகளுக்கு எஸ் தவச்செல்வன் கப்டன் டி ஏ எம் குணசிங்கம், ரி. ஜெயகாந்தன், ரி ஜெயக்குமார், ஏ ரோஜர் பேக்கர், எஸ். சோதிலிங்கம் ஆகியோர் நடுவர்களாக கடமையாற்றி வருகின்றனர். (இ-7)

## ஸ்ரீபதி வி.க. முதலிடம்

யாழ்ப்பாணம். ஏப். 19

பளை உதவி அரச அதிபர் பிரிவில் உள்ள விளையாட்டுக் கழகங்களுக்கிடையேயான மெய்வல்லுனர் போட்டியில் பளை ஸ்ரீபதி விளையாட்டுக் கழகம் 112 புள்ளிகளைப் பெற்று முதலாமிடத்தை பெற்றுக்கொண்டது

108 புள்ளிகளைப் பெற்ற கெனடி விளையாட்டுக் கழகம்இரண்டாம் இடத்தைப் பெற்றது.

கெனடி விளையாட்டுக்கழக மைதானத்தில் நடைபெற்ற இந்த போட்டிக்கு கிளிநொச்சி அரசாங்க அதிபர் திரு. க தேவசிகாமணி பிரதம அதிதியாக கலந்து கொண்டார்.

பளை உதவி அரசாங்க அதிபர் திரு. ச. கந்தசாமி தலைமை வகித்தார் (இ-7)

## செய்திக்கொத்து

### மக்கள் முகம்

### நிர்வாகிகள்

யாழ்ப்பாணம், ஏப்.19

இலங்கைக்கிடையில் நீதிக்கும் சமத்துவத்திற்குமான இயக்கத்தின் வடபிராந்தியக்கிளையின் பொதுக் கூட்டம் வட இலங்கை தனியார் மருத்துவக் கல்லூரி மண்டபத்தில் தலைவர் சே எஸ். ஆறுமுகம் தலைமையில் நடைபெற்றது

புதிய வருடத்திற்கான உத்தியோகத்தர்களாக தலைவராக கலாநிதி எஸ் சே சிற்றம்பலம் உப தலைவராக திரு. க. அன்னலிங்கம் செயலாளராக நிர்மலா பாலரத்தினம் உப செயலாளராக வணபிதா ஜெபசீலன் பொருளாளராக திரு. வே சிவராசா ஆகியோர் தெரிவு செய்யப்பட்டனர். (இ)

### வரட்சியால் கால் நடைகள் பாதிப்பு

அராலி, ஏப். 19

நாட்டில் ஏற்பட்டுள்ள கடும் வரட்சி காரணமாக வீட்டு விலங்குகள் நோய்களால் தாக்கப்படுகின்றன.

இவற்றை தவிர்த்துக் கொள்வதற்காக ஒவ்வொருவரும் தமது தமது விலங்குகளையும், வீட்டுப் பறவைகளையும் தடுப்பூசி ஏற்றுவித்து பாதுகாத்து கொள்ள வேண்டும்.

அராலி இளம் கால்நடை வளர்ப்பாளர் கழகம் இவ்வாறு வேண்டுகொள்கின்றது.

(இ-ன)

### புதிய உதவி ஆணையாளர்

பருத்தித்துறை, ஏப் 19

முல்லைத்தீவு மாவட்ட சமூகநல சேவை உதவி ஆணையாளராக திரு. செல்லையா டஞ்சலிங்கம் சமநல சேவை ஆணையாளரால் நியமிக்கப்பட்டுள்ளார். (இ-ன-118)

### அம்பாள் ஆலயத்திற்கு அன்பளிப்பு

வட்டுக்கோட்டை, ஏப்19

வட்டுக்கோட்டை சங்கரத்தை அருள்மிகு ஸ்ரீ பத்திரகாளி அம்பாள் ஆலயத்திற்கு மிக அழகிய புலி வாகனமும் பூத வாகனமும் உபயமாக அன்பளிப்புச் செய்யப்பட்டுள்ளன.

வட்டுக்கோட்டை மேற்கைச் சேர்ந்த திரு. எஸ் ஆனந்தரத்தினம் குடும்பத்தினர் புலி வாகனத்தையும், திரு. எஸ் ஸ்ரீபிரகாஸ் குடும்பத்தினர் பூத வாகனத்தையும் தமது உபயமாக வழங்கியுள்ளனர்.

(இ-ன-161)

### புனருத்தாரண வேலைகள் பூர்த்தி

வட்டுக்கோட்டை,ஏப்19

வட்டுக்கோட்டை மேற்கு தெல்லிப்பிராய் நாகதம்பிரான் கோவில் புனருத்தாரண வேலைகள் சுமார் 75 ஆயிரம் ரூபா செலவில் செய்து முடிக்கப்பட்டுள்ளன.

இக் கோவில் கும்பாபிஷேக விழா வெகு விரைவில் நடைபெறவுள்ளது (இ-ன-161)

### சங்கீத சபை பரீட்சைகள்

யாழ்ப்பாணம், ஏப்.19

வட இலங்கை சங்கீத சபை நடத்தும் பரீட்சைகள் இம்மாத இறுதியில் நடைபெறவுள்ளன

இந்த பரீட்சைக்குத் பங்குபற்றும் மாணவர்களை தயார் செய்வதற்கான ஆசிரியர் கருத்தரங்கு அண்மையில் யாழ் இந்து மகளிர் கல்லூரியில் நடைபெற்றது

(இ-7)

### புலமைப் பரிசில்

பருத்தித்துறை, ஏப். 19

வடமராட்சி இந்து மகளிர் கல்லூரியைச் சேர்ந்த மூன்று மாணவிகள் புலமைப் பரிசில்கள் பெற்றுள்ளனர்.

அண்மையில் வெளியான ஜீ சி ஈ சாதாரண 1985 ஆம் ஆண்டுப் பரீட்சையின் புள்ளிகளின் அடிப்படையிலேயே இப் புலமைப் பரிசில் வழங்கப்பட்டுள்ளன.

செல்வி வி. சிவப்பிரகாசம் சத்தியரேகா செல்வி ஆறுமுகம் சரோஜினி செல்வி கிருஷ்ண பிள்ளை பொற்செல்வி ஆகியோரே ஜீ சி ஈ புலமைப் பரிசில்களைப் பெற்றுள்ளனர்,

(இ-ன-118)

### புதிய மணிக் கோபுரம்

வட்டுக்கோட்டை,ஏப்19

வட்டுக்கோட்டை சங்கரத்தை அருள்மிகு ஸ்ரீ பத்திரகாளி அம்பாள் கோவிலுக்கு ஒரு லட்சம் ரூபா செலவில் மணிக் கோபுரம் ஒன்று அமைக்கப்படவுள்ளது.

வட்டுக்கோட்டை சங்கரத்தையைச் சேர்ந்த திரு இராசையா வெள்ளியம்பலம் என்பவர் மணிக் கோபுரத்தை தமது உபயமாக அமைத்துக் கொடுக்க முன்வந்துள்ளார்.

(இ-ன-161)

### அனலைதீவில் வரட்சி

அனலைதீவு, ஏப்.19

என்றுமில்லாதவாறு அனலைதீவு மக்கள் வரட்சியால் பாதிக்கப்பட்டுள்ளனர்.

கிணறுகளில் தண்ணீர் வற்றி அன்றாட தேவைகளுக்குக் கூட தண்ணீர் பெறமுடியாமல் இத்தீவின் மக்கள் கஷ்டப்படுகிறார்கள்

மின்சாரத் தோட்டங்களும் வரட்சியால் வியாபாரிகள் கைவிடப்பட்டுள்ளனர். (இ-ன-18)

### உதவி ஆசிரியர் பதவி

## யாழ், முல்லைத்தீவு, கிளிநொச்சி மாவட்டங்களிலிருந்து மிகவும் குறைவானோரே விண்ணப்பம்

பலாலி, ஏப் 19

ஆரம்ப பாடசாலைகளுக்கு உதவி ஆசிரியர் களைச் சேர்க்கும் பரீட்சைக்கு யாழ்ப்பாணம், முல்லைத்தீவு, கிளிநொச்சி மாவட்டங்களில் இருந்து மிகக் குறைவானோரே விண்ணப்பித்துள்ளனர்;

மார்ச் 20 ஆம் திகதி அரசாங்க வர்த்தமானியில் வெளிவந்த அறிவுறுத்தலில் மேற்படி தமிழ் மாவட்டங்களுக்கான கிராமசேவகர்பிரிவுகளும் அவற்றின் இலக்கங்களும் வெளிவராததால் பத்திரிகைகளில் மட்டுமே வெளிவந்தன.

இதனால் இந்த மூன்று மாவட்டங்களையும் விட மூன் கோரப்பட்டமையால் தென்பகுதி கிழக்குப் பகுதி கிராம சேவகர் பிரிவுகளுக்கு அதிகமானோர் விண்ணப்பித்திருந்தனர்.

இவ்வாறு விண்ணப்பித்தவர்கள் எவ்வித காரணம் கொண்டும் மேற்கூறப்பட்ட மூன்று தமிழ் மாவட்ட வெற்றிடங்களுக்கு நியமனம் பெறமாட்டார்கள் என்று கூறப்படுகிறது.

(இ-119)


## வவுனியாவில்

★ உள்ளூர்
★ சர்வதேச
★ ரெலிபோன்
★ ரெலெக்ஸ்
★ சேவை ★

14—04—87 இல் இருந்து ஆரம்பமாகிவிட்டது. உங்கள் தேவைகளுக்கு எங்களை நாடுங்கள்.

மு. காசிப்பிள்ளை சக புத்திரர்கள் வவுனியா.

(1213)


### கலைவாணி கல்வி நிலைய ஆண்டு விழா

வட்டுக்கோட்டை, ஏப.19

வட்டுக்கோட்டை கலைவாணி கல்வி நிலையத்தின் 5 ஆவது ஆண்டு விழாவும் பரிசளிப்பு வைபவமும் இன்று ஞாயிற்றுக் கிழமை பிற்பகல் 2 மணி அளவில் கலைவாணி கல்வி நிலைய நூலகத்தில் நிலைய ஆசிரியர் திரு. ச. செகராசசிங்கம் தலைமையில் நடைபெறுகிறது.

வட்டுக்கோட்டை லயன்ஸ் கழக முன்னாள் தலைவரும், பிரதம மாவட்ட ஆளுநரும் வட்டுக் கிழக்கு ஆரம்ப சுகாதார சபைத் தலைவருமான டாக்டர். ரி. பகீரதன் பிரதம விருந்தினராகக் கலந்து கொள்வார்.

விழாவில் காலஞ் சென்ற முதுதமிழ்ப் புலவர் நடராஜா, இராஜவைத்தியர் அம்பலவாணர் ஆகியோரது கல்விச் சேவைகள் குறித்து பாராட்டுரைகளும் ...

## கல்வி நிலையங்கள் சமூகத்தின் விளக்கு

கிளிநொச்சி, ஏப். 19

சமூகத்தின் விளக்குப் போல, சமூகத்தின் தலை சிறந்த அமைப்புக்களில் ஒன்றாக கல்வி நிலையங்கள் விளங்குகின்றன.

கிளிநொச்சி மாவட்ட மாணவர்களின் 'சமூகவியல் மன்றம்' அங்குரார்ப்பண வைபவத்தில் தலைமை வகித்துப் பேசிய கிளிநொச்சி விஞ்ஞானக் கல்வி நிலைய அதிபர் திரு எம் ஏ. கனகசிங்கம் மேற்கண்டவாறு கூறினார்

அவர் மேலும் பேசுகையில் கூறியதாவது:-

பாடசாலைக் கல்வி முடிந்ததும் மாணவன் சமூகத்தில் பிரவேசிக்கும் பொழுது இன்றைய கல்வி சமூகத்தில் பெரும் பாடுபடுகின்றன. ஆகவே தான் தலைசிறந்த சமூகப் பெரியார் வழைத்த மாணவ உலகிற்கு அறிவுரைகளையும், நல்ல வழிகாட்டல்களையும் காட்டுமாறு கேட்டுள்ளோம்.

இதனை அனைவரும் தம்சிரமேற் கொண்டு ஒழுகி நற்பிரஜைகளாக வாழ்ந்து காட்ட வேண்டும்.

இப்படி அவர் கூறினார்.

மன்றத்தின் அங்குரார்ப்பண வைபவத்தில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட ஆசிரியர் நடேசன் தம்பிராசாவும் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்ட கிளிநொச்சி மாணவிசாரணை அதிகாரியும் வைத்தியருமான சே வி சே. திருலோகமூர்த்தியும் மக்கள் விளக்கேற்றிவைக்க மாணவ மாணவிகள் தமிழ்த்தாய் வணக்கம் இசைத்தனர்.

## இடத்துக்கு ஏற்றவாறு உத்தியோகத்தர்களின் செயற்பாடுகளும் மாற வேண்டும்

### உதவி அரச அதிபர் உரை

வேலணை, ஏப். 19

மழை பெய்யும் பொழுது அது நல்ல நீராகவே பெய்கிறது ஆனால் அந்த நீர் நிலத்திலே விழும்பொழுது நிலத்தின் தன்மைக்கேற்ப மாறுதல் அடைகிறது. அவ்வாறே இடங்களைப் பொறுத்து உத்தியோகத்தர்களின் செயற்பாடுகளும் மாறுதலடைகின்றன.

வேலணை உதவி அரசாங்க அதிபர் திரு சி. சடாட்சரசண்முகதாஸ் இப்படித் தெரிவித்தார்.

வேலணை உதவி அரசாங்க அதிபராக கடமையாற்றி நெடுந்தீவு உதவி அரசாங்க அதிபர் பணிமனைக்கு இடம் மாற்றலாகிச் சென்ற உதவி அரசாங்க அதிபர் திரு தா. சந்திரசேகரத்திற்கும் புங்குடுதீவு மேற்கு கிராம சேவை அலுவலராக கடமையாற்றி ஓய்வுபெற்றுச் சென்றுள்ள கிராம சேவை அலுவலர் திரு த. வடிவேலுவுக்கும் இதே பணிமனையில் கடமையாற்றி வேறு உதவி அரசாங்க அதிபர் பணிமனைக்கு இடம் மாற்றலாகி சென்றுள்ள எழுதுவினைஞர்கள் திரு ம பாலசிங்கம், திரு ச கணேசன், திரு. சோமசுந்தரம் வீடமைப்பு உத்தியோகத்தர் திரு செ தெய்வேந்திரன் ஆகியோருக்கும் வேலணை உதவி அரசாங்க அதிபர் பணிமனையில் பதவி நிலை உத்தியோகத்தர் திரு. ஜே. ராஜா தலைமையில் பிரிவுபசார விழா நடைபெற்றது.

இவ்விழாவில் உதவி அரசாங்க அதிபர் திரு. சி சடாட்சர சண்முகதாஸ் தொடர்ந்து உரையாற்றுகையில் இன்றைய சூழ்நிலையிலே மக்களுக்காக தங்களை அர்ப்பணித்த சிறந்தசேவையை ஆற்றி மக்களின் நன்மதிப்பை பெற முயல்வது ஒவ்வொரு உத்தியோகத்தரின் கடமை என்றார்.

வேலணை விசேஷ சேவை உத்தியோகத்தர் திரு சே கணேசலிங்கம்.

வேலணை உதவி அரசாங்க அதிபர் பணிமனையில் கடமையாற்றி காவற்றுறை உதவி அரசாங்க அதிபர் பணிமனைக்கு இடம் மாற்றம் பெற்ற எழுதுவினைஞர் திரு. ம பாலசிங்கம் விசேஷ சேவை உத்தியோகத்தர் திரு. சோ. சச்சிதானந்தன், கிராம சேவை அலுவலர்கள் செ. சச்சிதானந்தன், திரு. என் சுந்தரராஜன், எஸ். பரமநாதன் ஆகியோரும் உரையாற்றினர். (இ-167)

### மின்பாவனை

அராலி கிராமத்தில் அதிகரித்து வரும் சட்ட விரோத மின்பாவனை காரணமாக கிராமமே இருளில் மூழ்கக் கூடிய அபாயம் ஏற்பட்டுள்ளது.

இதனால் சட்டவிரோத மின்பாவனையை நிறுத்தும் படி வேண்டுகோள் விடப்பட்டுள்ளது.

(இ-ன)


மூன்றும் ஆண்டு நினைவஞ்சலி



(19 - 04 - 1987)

அமரர்

வேலுப்பிள்ளை

விசுவலிங்கம்

(முன்னாள் அதிபர், நயினாதீவு மகாவித்தியாலயம்)

" ஆசானதிப ரருமைப் பெருங்குணங்கள் பேசா தாரிங்கிலைப் பேறடைந்தாள் — விசுபுகழ்

அன்பு விசுவலிங்க அண்ணலுயிர் சாந்திபெற எண்ணுமிறை பொற்றுவினி "

அன்பு உள்ளங்கள்

(2834)


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

**உதய சங்கற்பம்**

தேவன் அவனவனுடைய கிரியைகளுக்குத் தக்கதாய் அவனவனுக்குப் பலனளிப்பார். — பைபிள்


# உதயன்

இல. 15, கஸ்தூரியார் வீதி, தொலைபேசி: 24805, 23075
மின்சார நிலைய வீதி,
ஞாயிறன்று 19-04-1987 த.செ.இல. 23


## உயிர்ப்புத்தின சிந்தனை

ஈஸ்டர் என்று அழைக்கப்படும் உயிர்த்தெழுந்த ஞாயிறு தினம் இன்றாகும்.

ஈராயிரம் ஆண்டுகளுக்கு முன்பு மனித குலத்தின் உயர்வுக்காக இயேசுநாதர் சிலுவையில் அறையுண்டு மரித்து மூன்றும் நாள் உயிர்த்தெழுந்ததை இந்தத்தினம் குறிக்கிறது. இன்று உலகெங்கும் உள்ள கிறிஸ்தவர்கள் இத்தினத்தைக் கொண்டாடுகிறார்கள்.

இயேசுநாதரின் பிறப்பு முதல் அவரின் உயிர்த்தெழுகை வரையிலான கட்டங்களை நாம் நோக்கும்போது உயிர்த்தெழுதல் எவ்வளவு முக்கியமானது என்பதை அறிய முடிகிறது.

பெரும்பாலான கிறிஸ்தவர்கள் இயேசுநாதரின் பிறப்பான கிறிஸ்மஸ் தினத்தையே பெரிதாகக் கொண்டாடுகிறார்கள். ஈஸ்டருக்கு சிறிதளவு முக்கியத்துவமே கொடுக்கப்படுகிறது.

ஆனால் உயிர்த்தெழுதல் இல்லாதிருந்தால் இன்று கிறிஸ்தவ சமயமே இருந்திருக்காது என்பதை பலரும் உணரத்தவறி விடுகிறார்கள். மனித வர்க்கத்தின் மீட்சிக்காகத் தம்மைத் தியாகம் செய்தவர் இயேசுநாதர். வரலாற்றிலே நடைபெற்றிருக்காத அற்புத நிகழ்ச்சி இது.

இயேசுநாதரின் உயிர்ப்பு ஒவ்வொரு கிறிஸ்தவனும் உயிர்க்க வேண்டும் என்ற உண்மையை உணர்த்துகிறது.

இது கிறிஸ்தவர்களுக்கு மட்டும் அல்ல இன்றைய சமுதாய மக்கள் அனைவருக்கும் பொருத்தமானது ஆகும்.

குறிப்பாக வடக்கு, கிழக்கு மாகாணங்களின் இராணுவ அடக்குமுறைகளாலும் வன்செயல்களாலும் மனம் தளர்ந்த நிலையில் வாழும் மக்களுக்கு—

தங்கள் உற்றார் உறவினர்களை இழந்து உடைமைகளை இழந்து அல்லலுறும் மக்களுக்கு—

இன்றைய ஈஸ்டர் உயிர்ப்புத்தினம் புதிய நம்பிக்கையை அளிக்கிறது.

அடக்கப்படுபவன், உரிமை இழந்தவன் சதா காலமும் அப்படியே இருக்க முடியாது. அவன் கிளர்ந்தெழுவான். சுதந்திரத்தைத் தேடுவான். தனது அடங்கிப்போன உணர்வுகளை உயிர்த்தெழச் செய்வான். அது இயற்கை. யேசுபிரான் வாழ்க்கையிலேயே அது நிரூபிக்கப்பட்டிருக்கிறது.

உயிர்த்தெழுதல் அல்லது உரிமை வேண்டுதல் ஒவ்வாத ஒன்றல்ல. அந்த வகையில் ஈழத்தமிழர் உரிமைப் போராட்டமும் இயற்கையானது. நியாயமானது.

இதனை தமிழரல்லாத கிறிஸ்தவர்கள் நன்கு புரிந்து கொள்ளுதல் அவசியம். தமிழர்களின் உரிமைப் போராட்டம் நியாயம் எனப் பகிரங்கமாக எடுத்துச் சொன்னால் தென்னிலங்கையில் பௌத்தர்களின் சந்தேகக் கண்ணுக்கு இலக்காக வேண்டும் என்று அஞ்சக் கூடாது.

நியாயமானது, சரியானது எனப்படும் எதையும் வெளிப்படையாகச் சொல்வதற்கோ ஆதரிப்பதற்கோ தயங்கக் கூடாது. உயிர்த்தெழுதல் சமயத்தின் வாழ்க்கையில் மட்டுமன்றி அரசியலிலும் அத்தியாவசியம் என்பதை எவரும் மறந்து விடலாகாது.

அரசியல் உரிமை வேண்டி, மனித உரிமை வேண்டி உயிர்த்தெழுதல் செய்யும் தமிழர்களின் உரிமைப் போராட்டத்துக்கு ஆதரவளிக்கத் தென்னிலங்கைக் கிறிஸ்தவப் பெருமக்கள் மனம் துணிய வேண்டும்.

துன்பம் எங்கிருந்தாலும் அதைத் துடைக்க வேண்டும் என்பது கர்த்தரின் விருப்பம். அந்த வகையிலாவது தமிழர்களின் நியாயமான போராட்டத்துக்கு தென்னிலங்கைக் கிறிஸ்தவர்கள் ஆதரவு வழங்க வேண்டும். ஆகக் குறைந்தது தமிழர் போராட்டம் நியாயமானது என்பதையாவது பகிரங்கமாக எடுத்துரைத்து தார்மீக ஆதரவை வழங்க வேண்டும்.

## போராட்டத்துடன் பொருளாதாரத்திலும் மேம்பாடு காணவேண்டும்

பண்டத்தரிப்பு, ஏப். 19

தமிழ் ஈழத்தை மீட்கவும் இழந்த உரிமைகளை வென்று எடுக்கவும் எதிரியுடன் ஆயுதம் ஏந்திப் போராடும் அதே வேளை எமது மக்களிடையே அறியாமையை அகற்றவும் ஆரோக்கியத்தைக் கட்டி எழுப்பவும், பொருளாதார மேம்பாடு காணவும், உணவில் தன்னிறைவு காணவும் நாம் பாடுபட வேண்டும்.

பணிப்புலம் கிராமத்தில் ஆரம்ப சுகாதார நிலையம் ஒன்று திறந்துவைக்கப்பட்டது.

வைபவத்திற்குத் தலைமை வகித்த திரு க. குமாரசுவாமி மேற்கண்டவாறு கூறினார்.

வட்டுக்கோட்டை பிரதேச ஆரம்ப சுகாதார குழுப் பொறுப்பாளர் திரு. சங்கர் ஒழுங்கு செய்த இத் திறப்பு விழாவில் டாக்டர் இ. விக்னேஸ்வரன் பிரதமவிருந்தினராக கலந்துகொண்டார்.

சிகிச்சை நிலையத்தையும் மருந்தகத்தையும் அவர் திறந்துவைத்தார்.

முன்னாள் கல்லூரி அதிபர் திரு. க. விருத்தாசலம் உரையாற்றுகையில் தமிழ் ஈழ விடுதலைப் புலிகளின் பணி தன்னிகரில்லாதது இன, மத பேதம் அற்றது என்றார்.

டாக்டர் எம். கமலநாதன் சங்கானை பல நோக்கு கூட்டுறவுச் சங்கத்தலைவர் திரு கிருஷ்ணசாமி, தொல்புரம் பிரஜைகள் குழுத் தலைவர் திரு. ஈ. விஜயரத்தினம் உட்பட பலர் உரையாற்றினர். (இ-120)

---

பெருமதியிலும் குறைந்த விலைக்கு விற்கப்படும்

# ஜப்பானிய பொருள்களுக்கு நூறு சதவீத தீர்வை

## றேகன் நிர்வாகம் அறிவிப்பு

வாஷிங்டன், ஏப் 18

ஜப்பானின் சில ஏற்றுமதிப் பொருள்களுக்கு அமெரிக்கா நூறு சதவீத தீர்வை விதித்துள்ளது. வெள்ளிக்கிழமை தொடக்கம் இது அமுலுக்குக் கொண்டு வரப்பட்டுள்ளது.

பெருமதிக்குக் குறைந்த விலையில் பொருள்களை விற்பனை செய்வதில்லை என்ற முன்னைய இணக்கம் ஒன்றை ஜப்பான் மீறி நடப்பதாக றேகன் நிர்வாகம் குற்றம் சாட்டியுள்ளது.

அமெரிக்காவின் இந்த நடவடிக்கையால் ஜப்பானின் 30 கோடி டாலர் பெறுமதியான வர்ண டெலிவிஷன், கம்யூட்டர் போன்ற சாதனங்களின் ஏற்றுமதி பாதிக்கப்பட்டுள்ளது.

இம்மாத இறுதியில் ஜப்பானியப் பிரதமர் நாகசோனியுடன் பேச்சு நடத்த உள்ள சமயம் இந்த நடவடிக்கையை எடுக்க நிர்ப்பந்திக்கப்பட்டது குறித்து அமெரிக்க அதிபர் றேகன் வருத்தம் தெரிவித்துள்ளார்.

அமெரிக்காவின் நூறு சதவீத தீர்வை காரணமாக வர்ணடெலிவிஷன் கம்பியூட்டர் போன்ற ஜப்பானிய உற்பத்திப் பொருள்களின் விலை அமெரிக்காவில் இரண்டு மடங்காக அதிகரிக்கும். (இ)

## வன்செயல்கள் குறித்து தென் ஆபிரிக்கா விளக்கம்

ஜோஹன்னஸ்பேர்க், ஏப். 18

கறுப்பு இனத்தவர்களின் வன்செயல்கள் குறித்து தென்ஆபிரிக்க அரசு வெளிநாட்டு இராஜதந்திரிகளுக்கு விளக்கமளித்திருக்கிறது.

வன்செயலைத் தவிர்க்கும்படி தடைசெய்யப்பட்டுள்ள ஆபிரிக்க தேசிய காங்கிரஸ் தலைவர்கள்மீது தங்கள் செல்வாக்கைப் பிரயோகிக்கும்படி தென்ஆபிரிக்க அரசு வெளிநாடுகளைக் கோரியுள்ளது.

இதனிடையில், ரயில்களைத் தாக்கி எரிக்கும் வன்செயல்கள் நாளாவது தினமாக நேற்றும் நடைபெற்றன.

எட்டு ரயில் நிலையங்களில் ரயில்கள் தீ வைத்துக் கொளுத்தப்பட்டன.

இவ்வன்செயல்கள் 8 மாவட்டங்களுக்கு பரவியுள்ளன.

ஐந்து வாரங்களுக்கு மேலாக நடைபெற்று வரும் கறுப்புஇன ரயில் ஊழியர்களின் வேலை நிறுத்தத்தைத் தொடர்ந்து இவ்வன்செயல்கள் இடம்பெறுகின்றன. (இ-எ)

## பலஸ்தீனப் பிரச்சினை: சர்வதேச மாநாடு கூட்டுவதற்குக் கோரிக்கை

ஹராரே, ஏப்ரல் 16

பலஸ்தீனப் பிரச்சினைக்குத் தீர்வுகாண சர்வதேச மாநாடு ஒன்றைக் கூட்டும்படி அணிசேரா இயக்கத் தலைவர் றொபேர்ட் முகாபே வேண்டுகோள் விடுத்திருக்கிறார்.

அணிசேரா இயக்கத்தின் விசேட செயற்குழுக் கூட்டம் தற்சமயம் ஹராரேயில் நடைபெறுகிறது.

இக்கூட்டத்தைத் தொடக்கி வைத்துப் பேசுகையிலேயே சிம்பாப்வே பிரதமர் றொபர்ட் முகாபே மேற்கண்ட வேண்டுகோளை விடுத்தார்.

பலஸ்தீனப் பிரச்சினை பற்றி ஆராய்ந்து நடவடிக்கை எடுக்குமுகமாக இந்த விசேட செயற்குழு நியமிக்கப்பட்டது.

"ஜெருசலம் உட்பட கைப்பற்றப்பட்ட சகல அரபுப்பிரதேசங்களில் இருந்தும் இஸ்ரேலியர்கள் வெளியேற வேண்டும்.

சர்வதேச மாநாடு ஒன்றை இதற்காக ஐ.நா நடத்த வேண்டும். ஐ. நா. பாதுகாப்புச் சபையின் ஐந்து நிரந்தர உறுப்பினர்களும் இம் மாநாட்டில் பங்குகொள்ள வேண்டும்"

— இப்படி திரு. முகாபே வேண்டுகோள் விடுத்தார். (உ-எ)

**வெளி உலகில்**

## எகிப்துக்கு மீண்டும் ரஷ்யா ஆயுத உதவி

கெய்ரோ, ஏப்ரல் 18

இராணுவ உதிரிப் பாகங்களை எகிப்துக்கு மீண்டும் வழங்க இருப்பதாக ரஷ்யா அறிவித்திருக்கின்றது.

எகிப்தில் உள்ள சோவியத் தூதர் இத் தகவலை வெளியிட்டதாக அல் அஹ்ரம் நாளிதழ் தெரிவித்தது.

1970ஆம்ஆண்டு வரை எகிப்துக்கு இராணுவ தளபாடங்களை ரஷ்யாவே வழங்கி வந்தது.

அதுவரை ரஷ்ய ராணுவ ஆலோசகர்கள் எகிப்தில் தங்கி இருந்து ஆலோசனைகளும் வழங்கி வந்தனர்.

அப்போதைய ஜனாதிபதி அன்வர் சதாத் சோவியத்துடனான ராஜதந்திர உறவுகளைத் துண்டித்துக் கொண்டார்.

அதன் பின்னர் ரஷ்யாவின் ராணுவ ஆலோசகர்களும் எகிப்தை விட்டு வெளியேறினர். (இ-எ)

---

இரண்டு வருடம் கழித்தும்

## விஷவாயு தாக்கம் இன்னும் நீங்கவில்லை!

போபால், ஏப். 18

இந்தியாவின் போபால் நகரில் 1984 டிசம்பரில் ஏற்பட்ட விஷவாயுச் சம்பவம் காரணமாக நூற்றுக் கணக்கான மாணவர்களுக்கு ஏற்பட்ட பாதிப்புக்கள் இன்னும் நீங்கவில்லை என்று அறிவிக்கப்படுகிறது.

பாடசாலை மாணவர்கள் நரம்புத் தளர்ச்சியால் அவதிப்படுகிறார்கள் சிறுமிகள் உள ரீதியில் பாதிக்கப்பட்டுள்ளனர்.

வகுப்பு நேரங்களில் மாணவர்கள் காரணமின்றி கோபப்படுகின்றனர்; மகிழ்ச்சி இல்லாமல் இருக்கின்றனர்.

1984இல் நடந்த விஷவாயு விபத்தில் இரண்டாயிரத்துக்கு அதிகமானோர் உயிரிழந்தனர் என்பது தெரிந்ததே. (இ-எ)

## இஸ்ரவேலை கண்டிக்க மறுத்த 5 நாடுகள்

டார் எஸ்ஸலாம், ஏப் 18

இஸ்ரவேலைக் கண்டிக்க ஐந்து ஆபிரிக்க நாடுகள் மறுத்து விட்டன.

ஆக்கிரமிக்கப்பட்ட பிரதேசத்தில் வாழும் பலஸ்தீன தொழிலாளர் மீது இஸ்ரவேல் அடக்குமுறை நடவடிக்கைகளை மேற்கொள்வதை ஆபிரிக்க ஒற்றுமை தொழிலாளர் ஸ்தாபனம் கண்டித்து தீர்மானம் ஒன்றை நிறைவேற்றியது.

அத்தீர்மானத்திற்கு இணங்க இந்த ஐந்து நாடுகளும் இஸ்ரவேலைக் கண்டிக்க மறுத்து விட்டன.

ஐவரி கோஸ்ற், லைபீரியா, கபொன், கமரூன், லைபீரியா ஆகியவையே அந்த ஐந்து நாடுகளும் ஆகும்.

இத் தீர்மானத்தை எதிர்த்து இந் நாடுகள் வாக்களித்தன. (இ-எ)

### தங்கச் சுரங்கம்

சிட்னி, ஏப்ரல் 18

செலிபஸ்பிக் தீவுகளில் தங்கச் சுரங்கங்கள் கண்டு பிடிக்கப்பட்டுள்ளன. (இ-எ)

## உத்தரப் பிரதேசத்தில் இந்து-முஸ்லிம் கலவரம் 12 பேர் உயிரிழந்தனர்

புதுடில்லி ஏப்ரல் 18

உத்தர பிரதேசத்தில் இந்து, முஸ்லிம் கலவரத்தில் பன்னிரண்டு பேர் இதுவரை உயிரிழந்தனர்.

மீரட் நகரில் மட்டும் 8 பேர் கொல்லப்பட்டனர். 85 பேர் காயமடைந்தனர்.

ஜய்பூர் என்னும் இடத்தில் உள்ள பள்ளி வாசலில் நடந்த வெள்ளி நடந்த குண்டு வெடிப்பு ஒன்றில் மூன்று குழந்தைகள் உயிரிழந்தனர்.

அயோத்தியில் ராம ஜன்மபூமி என்று இந்துக்களால் அழைக்கப்படும் இடத்துக்கு முஸ்லிம்களும் உரிமை கோரியுள்ளனர்.

இது சம்பந்தமாகவே இந்த வன்செயல்கள் இடம்பெறுகின்றன (இ-எ)

---

# நம்பிக்கை தரும் ஈஸ்டர்

இன்று நாம் கிறிஸ்துவின் உயிர்ப்பு விழாவைக் கொண்டாடுகிறோம். கிறிஸ்தவ சமயத்தின் எல்லா விழாக்களையும் விட உயிர்ப்பு விழா மிக முக்கியமானதாகும்.



கிறிஸ்துவின் பிறப்பு விழாவிற்கு நாம் அதிக முக்கியத்துவம் கொடுக்கப் பழகிவிட்டோம். ஆனால் பிறப்பு விழாவை விட உயிர்ப்பு விழாத் தான் முக்கியமானதாகும்.

"கிறிஸ்து உயிர்க்கவில்லை என்றால் எங்கள் தூதுரை பொருளற்றது. உங்கள் விசுவாசமும் பொருளற்றது" (கொரி 15:14) என்ற புனித சின்னப்பரின் வார்த்தைகளில் இதை நாம் புரிந்து கொள்ளலாம்.

கிறிஸ்துவின் பிறப்பில் திருச்சபை பிறக்கவில்லை. உயிர் உள்ள விசுவாசமும் அப்போஸ்தலிக்க அறிவிப்பும் பிறக்கவில்லை. மாறாக கிறிஸ்துவின் உயிர்ப்பிலேதான் உயிர் உள்ள விசுவாசம் உருவாகி திருச்சபை பிறந்தது அப்போஸ்தலிக்க அறிவிப்பு தோன்றியது

நற்செய்தி ஏடுகளின் பொருளைப் புரிந்து கொள்ள வேண்டுமாயின் இயேசுவின் உயிர்ப்பில் இருந்து துவங்குங்கள் என்றார் மைக்கல் ரும்சே என்னும் இறையியல் அறிஞர்.

நற்செய்தியாளர்கள் நால்வரும் யேசுவின் உயிர்ப்பை அறிவிக்கவும் சான்று பகரவுமே நற்செய்தி ஏடுகளை எழுதினார்கள்.

சுருக்கமாகச் சொன்னால் உயிர்ப்பு விழா மிகவும் முக்கியமான விழா. இது ஒரு வரலாற்று நிகழ்ச்சி. இறையியலில் உயிர்ப்பு ஒரு உன்னத இடத்தைப் பெற்றிருக்கிறது.

கிறிஸ்துவின் இந்த உயிர்ப்பு ஒவ்வொரு கிறிஸ்தவனும் உயிர்க்க வேண்டும் என்ற உண்மையை உணர்த்தியதோடு வாழ்வு அர்த்தமுள்ளது என்ற நம்பிக்கை உணர்வுகளையும் தோற்றுவித்துள்ளது.

முக்கியமான இந்த விழா இக்கட்டான துன்பகால நிலையில் இருக்கும் எமக்கும் ஒரு புதிய வாழ்விற்கான "உயிர்ப்பையும்", நாம் வாழ்கின்ற துன்ப துயர அனுபவங்களின் மத்தியில் தொடர்ந்தும் வாழ முடியும் மனித வாழ்வு அழிவுகளின் மத்தியிலும், ஆக்கிரமிப்புக்களின் மத்தியிலும் அர்த்தமுள்ள வாழ்வுதான் என்ற உறுதியையும் நம்பிக்கையையும் தரவேண்டும்.

**ஞானக்கதிர்**

பல தடைகளின் பிரச்சினைகளின் சாட்டிலேயே நாம் ஒரு "சிறந்த" வாழ்வு வாழ்கிறோம். எமது கொள்கைகளையும், மனச்சான்றுகளையும், வாழ்... [illegible] ...களையும், மனித... [illegible] ...எதிர்த்து ஒரு சோர்ந்த வாழ்வு வாழ்கிறோம்.

துப்பாக்கி வேட்டுக்களையும், துயர ஒலங்களையும், மரண அழிவுகளையும், பொருள் இழப்புக்களையும் அடிக்கடி கேட்டும் அனுபவித்தும் நம் பிள்ளைகளை நாம் இழந்து விட்டோம்.


இந்த இழப்புக்களை நியாயப்படுத்த இயலாத போதும் நிறைவு செய்ய முடியாத போதும் வாழ்வின் புதிய வாழ்வு வாழ மறுக்கிறோம். மன நம்பிக்கைகளை இழந்து விடுகிறோம்.

கிறிஸ்துவின் உயிர்ப்பு விழா எம் அனைவருக்கும் நம்பிக்கையையும் தாங்குகின்ற சக்தியையும் பழைய நிலையில் இருந்து புதிய வாழ்வு வாழும் நிலையையும் தரட்டும்.

**றூபன் மரியாம்பிள்ளை**

---

**பொய்யாமொழி**



குறள்:

செயற்பால செய்யா திவறியான் செல்வம்
உயற்பால தன்றிக் கெடும்.

பொருள்:

செய்யத்தக்க நன்மைகளைச் செய்யாமல் பொருளைச் சேர்த்து வைத்திருப்பவனுடைய செல்வம், உய்யுந் தன்மை இல்லாமல் அழியும்.

---

**சமய சந்நிதிகளில்**

### யூதாதேயு ஆலய உற்சவம்

யாழ்ப்பாணம், ஏப்.19

அரியாலை புனித யூதாதேயு ஆலய வருடாந்த உற்சவம் 23 ஆம் திகதி ஆரம்பமாகின்றது.

தினமும் மாலை 5 மணிக்கு வழிபாடுகள் ஆரம்பமாகும்.

26 ஆம் திகதி காலை 7 மணிக்கு திருநாள் திருப்பலியும், மாலை 4.30 மணிக்கு திருப்பலியும் இடம்பெறும். (இ-வ)

### மணவாளக் கோல விழா

கொடிகாமம், ஏப்ரல் 19

மீசாலை வடக்கு வேம்பிராய காளிறைச்சாட்டி அலாக்கிர பூதவராத விநாயகர் மணவாளக் கோலம் இன்று ஞாயிற்றுக்கிழமை... [illegible] ...நூதன உற்சவ மூர்த்தி... [illegible] ...மணித் கோபுரப் பிரதிஷ்டை என்பன நடைபெறும். (இ-75)

### காமாட்சி அம்மாள் மகோற்சவம்

கொக்குவில், ஏப்ரல் 19

வண்ணை ஸ்ரீ காமாட்சி அம்மாள் வருடாந்த மகோற்சவம் எதிர்வரும் 29 ஆம் திகதி புதன்கிழமை ஆரம்பமாகி தொடர்ந்து பதினைந்து நாட்கள் உற்சவம் நடைபெறும். (இ-69)

## இனப் பாரம்பரியம் பேணிக் காக்கப்படின் பொருளாதாரம் வலுப்படும்

மண்டைதீவு, ஏப். 19

ஓர் இனத்தின் பாரம்பரியம் பேணிப் பாதுகாக்கப்படும் போது தான் அந்த இனத்தின் பொருளாதார உயர்வும் வலுப்பெற முடியும்.

ஊர்காவற்றுறை உதவி அரசாங்க அதிபர் எஸ். ஜீவரத்தினம் இவ்வாறு கூறினார்.

காரைநகரில் நடைபெற்ற பனை அபிவிருத்தி தொடர்பான கருத்தரங்குக்கு தலைமை வகித்து அவர் பேசினார்.

காரைநகர் தியாகராசா மத்திய மகா வித்தியாலய மண்டபத்தில் நடைபெற்ற இந்த வைபவத்தில் பொதுஸ்தாபனங்களின் பிரதிநிதிகள், திட்டமிடல் பகுதி உத்தியோகத்தர்கள், அபிவிருத்தி பகுதி உத்தியோகத்தர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

திரு. ஜீவரத்தினம் அங்கு தொடர்ந்து பேசுகையில் எம்மிடம் முள்ள நிலவளம், கடல் வளம், பனைவளம் அத்தனையும் பயன் படுமானால் எமது நாட்டின் பொருளாதார சுதந்திரம் எமது கையிலேயே இருக்கும் என்றார்.

பனை அபிவிருத்திச் சபைப் பணிப்பாளர் திரு. எஸ். பாலசிங்கம் பேசுகையில்-

வெளிநாட்டு நாகரிக மோகமும் இறக்குமதி பொருள்களை நம்பிய வாழ்க்கை முறைகளும் எமது இனத்தை பிடித்த பாரிய நோய் ஆகும்.

இதனால் வேலை வாய்ப்பற்ற நிலையும் சுதேசிய பொருள்கள் மீதான நாட்டமும் எமது இனத்திலிருந்து விலகிச் சென்றுள்ளன

இதனால் கிராமிய பொருளாதாரம், தொழில் வளம், குன்றிய இனமாக எமது இனம் மாறி விட்டது.

இந்த நிலை எமது எதிர்கால சந்ததியினரும் தொடராமல் இருக்க எமது மூல வளங்களை பயன்படுத்தி பொருளாதாரச் சுதந்திரம் பெற பனைவளம் எமக்கு பெரும் துணையாக இருக்கின்றது என்றார்.

பனை அபிவிருத்திச்சபையின் உற்பத்தி உதவி உத்தியோகத்தர் திரு ஜி. தங்கவேலு பேசுகையில்-

பனையை நம்பி வாழ்பவனுக்கு பனை கற்பகதருவாக இருந்து வாழ்வளிக்கின்றது என்றார். (இ-வ-88)

### மட்டக்களப்பில் மணிக்கூண்டு கோபுரம்

யாழ்ப்பாணம், ஏப். 19

மட்டக்களப்பு நகரின் மத்தியில் கட்டப்படும் மணிக்கூண்டு கோபுரத்திற்கான வேலைகள் முடிவடையும் தறுவாயில் உள்ளன.

இந்த மணிக்கூண்டு கோபுரத்தில் ஒரு லட்சம் ரூபா பெறுமதியான மணிக்கூடு ஒன்று விரைவில் பொருத்தப்படவுள்ளது. (இ-7)

### வெகுஜன இயக்க கூட்டம்

யாழ்ப்பாணம், ஏப்.19

மனித உரிமைகளுக்கான வெகுஜன இயக்கத்தின் அவசர கூட்டம் 21 ஆம் திகதி செவ்வாய் நடைபெறும்.

மாலை 4 மணிக்கு யாழ்ப்பாணம் பிரதான வீதியிலுள்ள 250 ஆம் இலக்க இல்லத்தில் இக் கூட்டம் நடைபெறும்.

சிறையில் உண்ணாவிரதம் இருக்கும் கைதிகளுக்கு ஆதரவாக நடத்தப்படவுள்ள போராட்டங்கள் பற்றி கூட்டத்தில் ஆராயப்படும். (இ-எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"TOEFL"
Weekend Classes
Duration -- 6 Months
Full Fees 250/- only
Commencement; 11-04-1987
Lectures by Popular English Lecturer
Mr. Kandiah Navarandrau
Cantabia Institute
21, Main Street, Jaffna, Phone: 24201 · 13, Rasavinthodam Lane, Jaffna.

# உதயன்

19 04 1987 ஞாயிற்றுக்கிழமை

COMPUTER PROGRAMMING
BASIC LANGUAGE
6 Months - Weekends
Commencement 25-4-1987
Fees: Rs. 1500/-
JOIN THE LEADERS
Cantabia Institute
21, Main Street, Jaffna. Phone: 24201 · 13, Rasavinthodam Lane, Jaffna.

# உண்ணாவிரதம் இருப்போரின் உடல்நிலை மோசமடைகிறது

கொழும்பு, ஏப். 20

வெலிக்கடைச் சிறையில் சாகும்வரை உண்ணாவிரதம் இருக்கும் தமிழ் அரசியல் கைதிகளின் உடல் நிலை நாளுக்கு நாள் மோசம் அடைந்து வருவதாக அறிவிக்கப்படுகின்றது.

ஆறு இளைஞர்களின் நிலை மோசமடைந்துள்ளது. மூவர் சுயநினைவு இழந்த நிலையில் உள்ளனர். சிலருக்கு கண் பார்வை இழக்கும் அபாயம் ஏற்பட்டுள்ளது.

சிறைச்சாலை டாக்டர்களின் சிகிச்சையை ஏற்றுக் கொள்ள இளைஞர்கள் மறுத்து விட்டனர்.

இதைத் தொடர்ந்து சிறைச்சாலை ஆணையாளர் திரு சி ரி ஜான்ஸ் அவசரமாக தொண்டர் நிறுவனங்கள் சிலவற்றுடன் கடந்த புதன்கிழமை தொடர்பு கொண்டார்.

இந்த நிறுவனங்களைச் சேர்ந்த சிலர் இளைஞர்களைச் சந்திக்க இணங்கியிருப்பதாகப் பின்னர் ஆணையாளர் தெரிவித்தார்.

உண்ணாவிரதம் இருப்பவர்களின் பெற்றோரை அழைத்து, அவர்களைக் கொண்டு உண்ணாவிரதத்தைக் கைவிடச் செய்யும் முயற்சியிலும் சிறைச்சாலை வட்டாரங்கள் ஈடுபட்டிருப்பதாகவும் தெரிகின்றது. (இ-எ)

## சங்குப்பிட்டியில் பயணிகள் வான் மீது தாக்குதல் முயற்சி

யாழ்ப்பாணம் ஏப் 19

பயணிகள் வாகனம் மீது ஹெலிக்கொப்டரில் இருந்து தாக்குதல் நடத்த சிப்பாய்கள் முயன்ற போது இராணுவ உயர் அதிகாரி ஒருவர் அதனைத் தடுத்ததினால் பயணிகள் பயிரிழையில் உயிர் தப்பினர்.

நேற்று சங்குப்பிட்டி வெளியில் இச் சம்பவம் நடைபெற்றது.

காலை பத்து மணி அளவில் சங்குப்பிட்டியில் இருந்து சேரதிவு நோக்கி பதினைந்துக்கும் அதிகமான பயணிகளுடன் வான் ஒன்று வந்து கொண்டிருந்தது.

சங்குப்பிட்டி கடற்கரைப் பக்கமாக வான் வந்து கொண்டிருந்த பொழுது திடீரென வந்த ஹெலிக்கொப்டர் ஒன்று தாழப்பறந்து வானைச் சுற்றிவட்டமிட்டது.

வான் நிறுத்தப்பட்டதும் ஹெலிக்கொப்டரில் இருந்த சிப்பாய்கள் பயணிகளை நோக்கிச் சுட முயன்றனர்.

அப்பொழுது வானுக்குள் இருந்த பெண் பயணிகள் வெளியில் வந்து சத்தமிட்டு குழறினர்.

இதனை அடுத்து ஹெலிக்கொப்டரில் இருந்த இராணுவ உயர் அதிகாரி ஒருவர் அவர்களைச் சுட வேண்டாம் என பணித்ததின் பேரில் தாக்குதல் முயற்சி நிறுத்தப்பட்டது. (இ-10)

## ஈஸ்டர் விளையாட்டு விழா ரத்து

யாழ்ப்பாணம் ஏப், 19

சென் ஜேம்ஸ் சனசமூக நிலையம் ஈஸ்டர் தினத்தில் வருடாவருடம் நடத்தும் விளையாட்டு விழா இம்முறை நடைபெறமாட்டாது. (இ)

## உண்ணாவிரதிகளின் கோரிக்கைகளை ஏற்று அவர்களை விடுதலை செய்க

### வர்த்தகர்சங்கம் ஜனாதிபதிக்கு அறிக்கை

யாழ்ப்பாணம், ஏப் 19

வெலிக்கடை, போகம்பரை சிறைச்சாலைகளில் சாகும்வரை உண்ணாவிரதம் இருக்கும் இளைஞர்களின் நியாயமான கோரிக்கையை ஏற்று அவர்களை விடுதலை செய்ய வேண்டும்.

யாழ் வர்த்தகர் சங்கம் ஜனாதிபதிக்கு அனுப்பியுள்ள அறிக்கையில் இவ்வாறு தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

சட்டத்தையும் நீதியையும் பாதுகாக்க வேண்டிய தங்கள் அரசு அவற்றைப் புறக்கணித்து குடிமக்களை கொடுமைப்படுத்தும் வகையில் நடந்து வருகின்றது.

எதுவித விசாரணையும் இன்றி தடுப்புக் காவலில் வைக்கப்பட்டுள்ள இளைஞர்கள் கடந்த ஐந்தாம் திகதி தொடக்கம் சாகும்வரை உண்ணாவிரதம் இருப்பது தாங்கள் அறிந்ததே.

இந்நிலையில் கூட இவர்களது கோரிக்கைகளை கவனத்திற்கு எடுக்காது தாங்களும் பாராமுகமாக இருப்பது தாங்களும் தங்கள் அரசும் தமிழ் மக்களை ஒரு வேண்டாத பிரசைகளாக மதிப்பதையே வெளிப்படையாக்காட்டுகிறது.

எனவே தாங்கள் இவ்விடயத்தில் மனிதாபிமான அடிப்படையில் தார்மத்தின் பெயரால் இளைஞர்களின் கோரிக்கைகளை ஏற்று அவர்களை விடுதலை செய்ய வேண்டும்.

இப்படி அந்த அறிக்கையில் கோரப்பட்டுள்ளது (இ-10)

## மினி பஸ்களுக்கான எரிபொருள் கூப்பனை செயலகம் மூலம் வழங்குக

### யாழ். அரச அதிபருக்கு மகஜர்

யாழ்ப்பாணம், ஏப்.19

மினிபஸ்களுக்கு எரிபொருள் பெறுவதற்கான கூப்பன்களை யாழ் செயலகம் மூலம் வழங்க வேண்டும்

வடபிராந்திய மினி பஸ் சேவைச் சங்கத்தின் தலைவர் திரு. பொன்மதி முகராசா யாழ் அரச அதிபருக்கு அனுப்பி வைத்துள்ள மகஜர் ஒன்றில் மேற்கண்டவாறு கோரி உள்ளார்

மகஜரில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

எமது சங்கத்தின் கட்டுப்பாட்டில் சேவையாற்றும் மினிபஸ்கள் அனைத்தும் தினமும் சேவையில் ஈடுபடுவதற்கு தேவைப்படும் எரிபொருளை வழங்க தாங்கள் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

எமது சேவை அத்தியாவசிய சேவைகளில் ஒன்றாகக் கருதப்படுகின்றது.

எனவே இச் சேவைக்கு வேண்டிய குறைந்தளவு எரிபொருளை தினசரி விநியோகிக்கப்பட ஆவன செய்யும்படி வேண்டுகிறோம்.

எரிபொருள் கூப்பனை தங்கள் செயலகத்தினூடாக விநியோகிக்க வேண்டும் என்று கோரிக்கை விடுகிறோம்.

இப்படி மகஜரில் தெரிவிக்கப்பட்டிருந்தது.

## ஒரு சிப்பாய் உயிரிழப்பு

யாழ்ப்பாணம், ஏப்ரல் 19

விடுதலைப் புலிகளைச் சுற்றிவளைக்க முயன்ற இராணுவத்தினர் மீது புலிகள் நேரடித் தாக்குதல் நடத்தியதில் சிப்பாய் ஒருவர் கொல்லப்பட்டார். மூன்றுபேர் காயமடைந்தனர்.

கடந்த 13 ஆம் திகதி பதவியாப் பகுதியில் உள்ள முந்திரிக்குளம் இராணுவ முகாமுக்கு அருகாமையில் இச்சம்பவம் நடைபெற்றது.

தமது தரப்பில் எதுவித இழப்பும் இல்லை என புலிகள் தெரிவித்துள்ளனர்" (இ-10)

## ஆய்வு நிறுவன தொழில் நுட்ப அறிமுக அரங்கு

யாழ்ப்பாணம், ஏப். 19

யாழ்ப்பாண ஆய்வு நிறுவனத்தினரின் தொழில்நுட்ப அறிமுக அரங்கு இன்றும் நாளையும் நாளை மறுதினமும் சாவகச்சேரியில் நடைபெறும்.

கட்டாண்ட உற்பத்தி, சூரிய சக்தியின் பயன்பாடு, உயிர் வாயுப் பயன்பாடு, உமி, சிரட்டைக் கரியிலிருந்து உச்சப் பயன்பாடு, புல்லில் இருந்து பாவனைப் பொருள்கள், தென்னந்தும்பு பிரிக்கும் இயந்திரம், பாலுணவுப் பொருள்கள். புகையூட்டிய மீன் ஆகியன சம்பந்தமான செயல்முறைகள் பற்றிய விளக்கமும் இன்றைய தொழில்நுட்ப அரங்கில் தரப்பட்டுள்ளன.

காலை 9 மணி தொடக்கம் மாலை 5 மணிவரை இப் பொருட்காட்சிகள் நடைபெறும். (இ-10)

## பிலிப்பீன்ஸில் தாக்குதல் முறியடிப்பு

பிலிப்பீன்ஸின் தரைப் படைத் தலைமை அலுவலகத்தின்மீது இராணுவத்தின் ஒருபிரிவு சிப்பாய்கள் நேற்று நடத்திய அதிரடித் தாக்குதல் அரச சார்பான துருப்புக்களினால் முறியடிக்கப்பட்டது.

இதில் ஒரு கிளர்ச்சிக்காரச் சிப்பாய் கொல்லப்பட்டார் இரண்டு பேர் காயமடைந்தனர்.

8மணிநேர மோதலின் பின்னரே கிளர்ச்சித் துருப்புக்களின் தாக்குதல் முறியடிக்கப்பட்டது (இ-எ)

## ஊழல் குற்றச்சாட்டின் பின்னணியில்

## வெளிநாட்டுச் சக்தி ஒன்று இயங்குகின்றது

### ராஜீவ் குற்றச்சாட்டு

புதுடில்லி, ஏப். 19

இந்திய அரசுக்கு எதிராகச் சுமத்தப்பட்டுள்ள ஊழல் குற்றச்சாட்டுகளுக்குப் பின்னணியில் வெளிநாட்டுச் சக்தி ஒன்று இயங்குகின்றது

இந்திரா காங்கிரஸ் எம்பிகளின் கூட்டம் ஒன்றில் திரு. காந்தி மேற்கண்டவாறு கூறினார்.

சுதந்திர வெளியுறவுக் கொள்கை ஒன்றை இந்தியா கடைப்பிடித்து வருகிறது. அதற்கான விளைவுகள் இந்த ஊழல் குற்றச்சாட்டுகள் என்றும் ராஜீவ்காந்தி தெரிவித்தார். (இ-எ)

## யாழ்தேவி . . .

(1ம்-பக்கத் தொடர்ச்சி)

மீண்டும் யாழ்ப்பாணம் திரும்பி வந்தனர்.

எனினும் கொழும்பில் இருந்து வந்த வாகனங்களை சிப்பாய்கள் எவ்வித தடங்கலும் போடாது யாழ்ப்பாணம் வருவதற்கு அனுமதித்தனர். (இ10-)

## இந்தியா - - -

(1ம் பக்கத் தொடர்ச்சி)

எந்தக் குழுச் செய்திருந்தாலும் இந்தியா அதனை வன்மையாகக் கண்டிக்கிறது

இப்படி இந்தியத் தூதர் விடுத்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது: (இ-எ)

## படுகொலை - - -

(1ம்- பக்கத்தொடர்ச்சி)

விக்கலை'-என்று தெரிவித்தார்.

அதே நேரத்தில் இப் படுகொலையின் பின்னணியில் ஜே வி.பி.யினர் உள்ளனர் என்பதற்கான மேலதிக தகவல்கள் வெளிவந்தவண்ணம் உள்ளன.

கடந்த புதன் கிழமை பள்ளகெல்ல ஆயுத படை முகாமில் இருந்து ஆயுதங்களைக் கொள்ளையடித்தசம்பவம் தொடர்பாக 80 இராணுவத்தினர் தீவிர விசாரணைக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர்;

ஜே வி.பி யின் நடவடிக்கைகள் தென் இலங்கையில் அண்மைக் காலமாக தீவிரமடைந்துள்ளன'-

இப்படி பி. பி. சி. செய்தியில் தெரிவிக்கப்பட்டது (இ-எ)

## மன்னூரு- - -

(1-ம் பக்கத்தொடர்ச்சி)

ஞர்ப் பகுதிக்கு விரைந்துள்ளனர்.

மன்னூர்ப் பகுதியில் மீண்டும் விடுதலைப் புலிகளின் தாக்குதல்கள் சிப்பாய்கள்மீது நடத்தப்பட்டதை அடுத்தே இராணுவம் பலப்படுத்தப்பட்டு வருகிறது.

மன்னூர்த்தள்ளாடி இராணுவ முகாமில் தங்கியுள்ள சிப்பாய்கள் தற்பொழுது சுற்றிவளைப்பு தேடுதல் நடவடிக்கையில் ஈடுபட்டுவருகின்றனர். (இ-10)

## பேச்சு நடத்துவது குறித்து பிரபாகரன் எதுவும்கூறவில்லையாம்

சென்னை, ஏப்ரல் 19

இலங்கை அரசுடன் பேச்சுக்களை நடத்துவதற்கான நிபந்தனைகள் பற்றி யாழ்ப்பாணத்தில் வைத்து திரு. பிரபாகரன் கருத்து எதையும் வெளியிடவில்லை

அப்படி வெளியிட்டதாக இந்தியப் பத்திரிகைகள் சிலவற்றில் இம் மாதம் 10 ஆம் திகதி வெளிவந்த செய்திகள் ஆதாரமற்றவை.

தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கப் பேச்சாளர் ஒருவர் சென்னையில் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

யாழ்ப்பாணத்தில் வைத்து திரு பிரபாகரன் எவரிடமும் அப்படி ஒரு அறிக்கையை விடவில்லை என்றும் அந்தப் பேச்சாளர் தெரிவித்தார்.

இராணுவத் தாக்குதல் நிறுத்தி, பொருளாதாரத் தடையை நீக்கினால் இலங்கை அரசுடன் பேச்சுக்களை நடத்தத் தயார் என்று திரு. பிரபாகரன் தன்னைச் சந்தித்த யாழ் முக்கிய பிரமுகர்களிடம் தெரிவித்தார் என்று 'இந்து' கடந்த 10 ஆம் திகதி இதழில் வெளியிட்ட செய்தியை இப்போது மறுக்கப்பட்டுள்ளது. (இ-எ)

## லொறியில் இருந்தோர் கொலை?

யாழ்ப்பாணம், ஏப்ரல் 19

அனுராதபுரத்தில் இருந்து வடக்கு நோக்கி வந்து கொண்டிருந்த லொறி ஒன்றை மதவாச்சியில் இடைமறித்த சிலர் அதனுள் இருந்தோரை வெட்டிக் கொலைசெய்தனர் என்று கூறப்படுகிறது

எனினும் லொறி யாழ்ப்பாணத்தைச் சேர்ந்ததா அல்லது வவுனியாவைச் சேர்ந்ததா என்பதுபற்றிய விபரம் எதுவும் செய்தி அச்சுக்குப் போகும்வரை உறுதிப்படுத்தப்படவில்லை (இ-10)

## அரசியல் கைதிகளை விசாரணை செய் அல்லது விடுதலை செய்

### அன்னையர் முன்னணி கோருகிறது

யாழ்ப்பாணம், ஏப் 19

அரசியல் கைதிகளை விசாரணை செய் அல்லது விடுதலை செய்; முடியாவிடில் செத்து மடியவிடு.

அன்னையர் முன்னணி விடுத்த அறிக்கையில் மேற்கண்டவாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

வெலிக்கடைச் சிறையில் சாகும் வரை உண்ணாவிரதம் இருக்கும் தமிழ் அரசியல் கைதிகளுக்கு ஆதரவு தெரிவித்து இந்த அறிக்கை அன்னையர் முன்னணி வெளியிட்டுள்ளது

உண்ணாவிரதம் மேற்கொண்டுள்ள இளைஞர்களின் கோரிக்கைகளை உடன் நிறைவேற்ற அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் - அன்னையர் முன்னணி தனது அறிக்கையில் இப்படிக் கோரியுள்ளது. (இ-எ)

## சாம்பிய அதிபர் குற்றச்சாட்டு

லுசாகா, ஏப்.18

சாம்பிய அரசைக் கவிழ்க்கும் முயற்சியில் தென் ஆபிரிக்க அரசு ஈடுபட்டுள்ளது

சாம்பிய அதிபர் கென்னத் கவுண்டா இப்படி தென் ஆபிரிக்க அரசு மீது குற்றம் சுமத்தியிருக்கிறார். (இ-எ)

## ஜெய்ப்பூர்கால் தொழிற்சாலைக்கான உதயன் -- சஞ்சீவி உதவி நிதி

உதயன் - சஞ்சீவி ஆரம்பித்த ஜெய்ப்பூர் கால் தொழிற்சாலைக்கான உதவி நிதிக்கு வாசகர்களும், அபிமானிகளும் அள்ளி அள்ளி வழங்குகிறார்கள். பலர் நேரில் வந்து தமது அன்பளிப்பைச் செலுத்துகிறார்கள். நீங்களும் அவ்வாறே செய்து பாதிக்கப்பட்டவர்களுக்குப் புதுவாழ்வு அளிக்க உதவுங்கள்.

மேற்படி நிதிக்கு நன்கொடை வழங்கியவர்களின் ஐந்தாவது தொகுதிப் பட்டியலைக் கீழே காணலாம்.

| பெயர் | முகவரி | ரூ. ச. |
| --- | --- | --- |
| ஏற்கனவே சேர்ந்த தொகை; | | 89,483 12 |
| 41. ஓர் அன்பர் | நாவலர் வீதி, யாழ்ப்பாணம் | 25-00 |
| 42. காந்திஜீ சனசமூக நிலைய அங்கத்தவர்கள், | கொக்குவில் | 120-00 |
| 43 திருமதி பத்மாவதி சச்சிதானந்தம் குச்சம் ஒழுங்கை. | வல்வெட்டித்துறை | 200-00 |
| 44 ஓர் சகோதரி | வல்வெட்டித்துறை | 50-00 |
| 45 ஓர் அன்பர், | மணிக்கூட்டு ஒழுங்கை, யாழ்ப்பாணம் | 100-00 |
| 46 அடியார், | கொழும்புத்துறை | 150-00 |
| 47 திருமதி அ சரவணமுத்து ஞாபகார்த்த அன்பளிப்பு | உரும்பராய் | 100-00 |
| 48. திருமதி பொ. இரத்தினமகிழ்வாசகம் "ஆபர்பாடி", | சோண்டாவில் | 600-00 |
| 49. தெல்லியடி சல்வி வளர்ச்சிக் கழக உயிரியல்பிரிவு மாணவர்கள் | | 1,270-00 |
| 50 திரு. க நித்தியானந்தன் | குப்பிளான் | 50-00 |
| 51 குருநகர் புதிய சந்தை வர்த்தகர்கள் சங்கம், | குருநகர் | 500-00 |
| 52. ஓர் அன்பர் | காங்கேசன்துறை | 50-00 |
| 53, தமிழ் சொல்லகலட்டி. | தெல்லிப்பழை | 100-00 |
| | மொத்தம்: | 82,738-12 |

## விசித்திரம்

யார், முரளித் தம்பியே? வாரும். எப்பிடி ஊர் உலகத்தில ஏதாவது விசேஷமான புதினங்கள் உண்டோ அல்லது வழமையான பூச்சியம் தானோ...?

ஓ. இப்ப பெரிய செய்தியள், பரபரப்பான செய்தியள் எல்லாம் தெற்குப் பக்கமாய்த் தான். சம்பவங்கள் அங்கை தான் அடுத்தடுத்து நடக்குது.

பாக்கையில்லையே மூன்று வருஷமாய் இராமண்ணு மார் தங்களுக்குள்ளை அடிபடுகினம், கடுபடுகினம், சாகினம்.

வேறு ஆயுதக் கோஷ்டியள் காம்புகளுக்குள்ளை நுழைஞ்சு ஆயுதங்களைக் கைபாடிப் போகுதுகள் உள்ளாடும் கள்ளாடுமாய் உதவி இல்லாமல் சொற்ப நேரத்திலை பல கோடியிலை ஆயுதங்களைக் கைமாடை முடிஞ்சுது என்டது சந்தோசத்துக்கு உரிய விஷயம் தான். அமிலிருந்தித் திட்டங்களுக்கு குண்டு வைக்கிற முயற்சியளும் அங்கை ஆரம்பிச்சிருக்கு

சனி எண்டும் பக்கணக்கழகங்களிலை பிரச்சினை ஆரம்பிக்கலை நாள் போகிச்சனுன். உது பெரிய அளவிலை வந்து முடியும் எண்டு முந்தி 1971 ஆம் ஆண்டிலையும் பல்கலைக்கழகங்களிலை தான் புரட்சிப் பயிற்சியள் நடந்தது.

தெற்கிலை வன்செயல்கள் அதிகரிச்சால் பெரிய சங்கடம் எல்லாம் வந்து சேரும். அரசாங்கத்தாலை வடக்கிலும் தெற்கிலும் ஈடுகொடுக்கிறது பெரிய கஷ்டமாயிருக்கும்.

அரசாங்கம் தன் னிட்டை ஆயுத பலம் இருக்குது எண்ட துணிவிலை நின்டு பிடிக்கலாம் எண்டு நினைக்கக்கூடும். அது நாட்டிலை பெரும் இரத்தக் களரியை உண்டாக்கும்.

தடி எடுத்தவன் தடியாலே சாவான் எண்டு சொல்லுவினம் பிரச்சினையளை அரசியல் ரீதியில் தீர்க்காமல் ஆயுதத்தாலை தீர்க்க நினைக்கிற அரசாங்கங்கள் அதாலையே தான் அழியும் எண்டது நிச்சயம்.

பல நாடுகளிலை, ஆயுத அரசுகள் ஆட்சி செய்த நாடுகளிலை, இரத்த வெள்ளம் பாய்ஞ்ச பின்னர் இராணுவமே ஆட்சிக்கு வந்ததையும் சரித்திரங்கள் காலத்துக்குக் காலம் காட்டியிருக்கு.

வடக்கிலை தமிழர் தானே ஆயுதத்தாலை அடக்கிவிடலாம் எண்டு அரசாங்கம் நினைச்சிருக்கலாம். தெற்கிலை ஆயுதத்தாலை அடக்குவது கஷ்டம். அங்கை அரசின்ரை சொந்த மக்கள் வாழுகினம்.

எனவே ஆயுதத்தாலை அடக்கிறது எண்டது பெரிய கஷ்டம் அதை உணர்ந்து அரசாங்கம் தமிழர் பிரச்சினையையும் தெற்கிலங்கைப் பிரச்சினைகளையும் சமாதானமாகத் தீர்த்து வைக்க உடனடியாக ஏதாவது செய்ய வேணும்

ஆயுத பலத்தை நம்பி அரசாங்கத்தினர் முரண்டு பிடிச்சால் அவைக்கும் ஆபத்து! நாட்டுக்கும் கட்டம். மக்களுக்கும் கஷ்டம். இந்தக் கட்டத்திலை யாவது திமிரை விட்டு, கொஞ்சம் விட்டுக்கொடுக்க அரசாங்கத் தலைவர்கள் சமயோசிதமாக நடக்க வேணும் எண்டு கேட்டுக் கொள்கிறேன்.

* * *

பாக்கையில்லையே பிரிட்டிஷ் மந்திரி வடிங்டன் செய்த வேலையை! தமிழ் அகதிகள் சம்பந்தமாய் ஒரு முடிவுக்கு வாறதுக்காக நிலைமையை நேரில் அறியவந்தவர். அரசாங்கம் தெரிவு செய்த இடங்களுக்கு மட்டும் போய்ப் பார்த்துவிட்டு அரசாங்கம் செய்யிறது எல்லாம் சரிதான் என்ட தோரணையில பேட்டியும் குடுத்துவிட்டுப் போயிட்டார்.

கடைசி நேரத்திலை பேருக்குப் பூசா தடுப்பு முகாமுக்குப் போய் அங்கை இருக்கிற தமிழ் கைதிகளைப் பார்த்துவிட்டுப் போனார்.

அவர் வெலிக்கடைக்கு அல்லது போகம்பரைக்குப் போய் அங்கை உண்ணாவிரதம் இருக்கிற இளைஞர்களைப் பார்த்திருக்க வேணும். அப்பிடிச் செய்யயில்லை

பூசாவுக்குப் போனவர் அங்கையாவது தமிழ்க் கைதிகளை தனியாகச் சந்திக்க நிலைமைகளைக் கேட்டாரா? அதுதான் இல்லை.

சுந்திரா இராணுவ அதிகாரிகள் நிக்கத்தான் கைதியளோட கதைச்சார். அப்பிடி என்டால் எப்பிடி அவரால உண்மையான நிலைமை அறிய முடிஞ்சது? இதைக் கேட்கிறேன்!

பூசாவிலை எங்கட தமிழ் இளைஞரை, ஆடுமாடுகளை முள்ளுக்கம்பி கட்டி அடைப்பதுபோலை அடைச்சிருக்கிறுன்கள் விழுவன்கள். தீனியாதத் தேவை கொஞ்சம்கூட சம்பந்தமில்லாத அப்பாவிகளையும் பிடிச்சுக் கொண்டுபோய் அங்கை அடைச்சு வைச்சிருக்கினம். அவை அனுபவிக்கிற வசதியீனையும், புவர் வாழ்க்கையும் அந்த முள்ளுக்கம்பி வேலியள் மூலம் அறியலாம்!

உதாரணுக்கு எல்லாம் உவை விளங்கிலை அனுபவிக்காமலே போகிறவை! தென்னிலங்கையிலை அது தான் வினை தொடங்கி இருக்கு...!

கொண்டோடி



## இன்றைய - - -

(1 ம்பக்கத் தொடர்ச்சி)

நிகழ்த்திய ஆய்வு நிறுவனப் பிரதிநிதிகளில் ஒருவரான முகிலன் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் பேசுகையில்:-

இன்றும் கூட சில மக்கள் ஜப்பான், ஜெர்மனி போன்ற நாடுகளின் கவர்ச்சிப் பொருட்களில் லயித்து நிற்கிறார்கள்.

எமது மண்ணின் உற்பத்திகளை மறந்து விடுகிறார்கள்.

எனவே பொருளாதார ரீதியாக நாம் போராட வேண்டும். எமது மண்வளம் பேணப்பட வேண்டும்.

இவ்வாறு அவர் கூறினார்

இந்த மாநாட்டில் பிரபல தொழிலதிபர் திரு. நரசிங்கம், பேராசிரியர் திரு. சு துரைராசா குருவசமிகரி ஆகியோரும் கலந்து கொண்டு உரை நிகழ்த்தினர். (இ-10)

## இழக்கு - - -

(1-ம் பக்கத்தொடர்ச்சி)

டுள்ளது.

இந்த நிலையில் ரயில்களுக்கு பாதுகாப்பு வழங்கப்படுவது கஷ்டமானது.

அதன் காரணமாகவே ரயில் சேவைகள் மறு அறிவித்தல்வரை ரத்துச் செய்யப்பட்டுள்ளன என்று வெகுஜன தொடர்பு நிலையம் மேலும் தெரிவித்தது (இ-எ)

இப்பத்திரிகை யாழ்ப்பாணம், மின்சார நிலைய வீதி. இரண்டாம் ஒழுங்கை 15ஆம் இலக்கத்தில் உள்ள உதயன் பப்ளிக்கேஷன்ஸ் (பிறைவேட்) லிமிடெட் ஸ்தாபனத்தாரால் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது. வெளியிட்ட திகதி 19 - 04 - 1987 தொலைபேசி இல. 24805, 23078
Printed and Published by Uthayan Publications (Private) Ltd . 15, Second Lane, Power House Road, JAFFNA:
Registered as a Newspaper at the General Post Office Under Number QJ / 94 / N/87 Telephone. 24805, 23078

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org